REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க.தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: ஆவணி 3உ வெள்ளி (19—8—55) ★ ★ வெளியூர்: ஆவணி 4உ சனி (20—8—55) [இதழ் 57

கொடி திருடும் 'குணாளர்கள்!'

திருவண்ணாமலை, ஆக. 18—

வேட்டவலம் ஊரில் பறந்து கொண்டிருந்த தி. மு. கழகக் கொடியையும், கொடி கட்டப்பட்டிருந்த கொடிமரத்தையும், 'யாரோ' களவாடிப் போயிருக்கின்றனர்.

நமது தோழர்கள், போலீசாரிடம் இது குறித்து ஒரு புகார் தாக்கல் செய்திருக்கின்றனர்; இதுவரை பலன் இல்லை; இன்னும் போலீசார் புலன் விசாரிக்கிறார்களாம்

கொடி திருடும் கோமாளித்தனத்தில் ஈடுபட்டவர் ஒரு ஆரியரே என்று ஊர் மக்கள் பேசிக்கொள்கின்றனராம்!

இப்போது நமது தோழர்கள் வேறு புதிய கொடி ஏற்றியிருக்கின்றனர். (ந—தி.)

மக்கள் எழுச்சியை மதிக்க மறுப்பு!

'ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றது எனக்குத் தெரியாது'

'ஆர்ப்பாட்டங்களால் விவாதிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகவில்லை

மக்கள் சபை தலைவரின் விசித்திர விளக்கம்

"கோவா எல்லைக்குள் நுழைந்த 22 அறப்போர் வீரர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்;

"காயப்பட்ட 225 நபர்களில் 38 நபர்கள் படுகாயங்களுக்கு ஆளாகியுள்ளனர்;

"தகவல் அறிய முடியாது தவறிப் போயிருக்கும் மூவரில் ஒருவர், கோவா அரசாங்கத்தால் கைது செய்யப்பட்டுள்ளார்."

இத்தகவலை, மக்கள் சபையில் பிரதமர் நேரு அறிவித்துள்ளார்.

"நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றுள்ளன என்பது எனக்குத் தெரியாது; ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று இருக்கக்கூடும்; அது (கோவா) குறித்து விவாதிக்க வேண்டிய சூழ்நிலையை, அந்த ஆர்ப்பாட்டங்கள் உருவாக்கவில்லை."

இவ்வாறு கூறி, மக்கள் சபையில் கொண்டுவரப்பட்ட ஒத்திவைப்பு கோரிக்கையை, சபைத் தலைவர் மாவ்லங்கர் ஒதுக்கிவிட்டார்.

கம்யூனிஸ்டு உறுப்பினரான முகர்ஜி, கடந்த ஆகஸ்டு 15-ந் தேதியன்றும், அதற்கு முன்பும், பின்பும், கோவாவில் போர்ச்சுகீசியரின் அடக்குமுறை கொடுமைகளை ஒட்டி இந்தியாவெங்கணும் எழுந்துள்ள 'ஆபத்தான சூழ்நிலை' குறித்து விவாதிக்க வேண்டுமென்று ஒரு ஒத்திவைப்புப் பிரேரபணை கொண்டுவந்தார்.

"நாடெங்கும் நடைபெற்றுள்ள ஆர்ப்பாட்டங்களினால் மக்களின் உணர்ச்சி வெளிப்பட்டிருக்கிறது; போராட்டம் நிறுத்தப்படவில்லை; தொடர்ந்து நடைபெறும் எனத் தெரிகிறது; எனவே, இந்த இரண்டு காரணங்களாலும், கோவா அடக்குமுறையின் விளைவுகள் பற்றி இங்கு விவாதிக்க வேண்டும்," என்று அவர் கோரியிருக்கிறார்.

பிரதமர் நேரு, நிலைமை குறித்து இன்னும் சற்று பின்னால் விவாதிக்கலாமென்றும், உள்நாட்டை பொறுத்தவரையில் மட்டுமின்றி, அகில உலகத்தையும், பொறுத்த சில சிக்கல்களடங்கிய இந்தப் பிரச்சினை குறித்து சர்க்காரின் கொள்கையில் எவருக்கும் சற்றும் சந்தேகம் இருக்கக்கூடாதென்றும், ஆனாலும், இன்னும் சிலநாள் கழித்து விவாதிப்பதினால் கிடைக்கும்பலன் இப்போது விவாதிப்பதினால் கிடைக்காமல் போய்விடலாம் என்றும், பதில் கூறியிருக்கிறார்.

அதன் பின்னர்தான், சபைத் தலைவர், மேற்கண்டவாறு கூறி, பிரேரபணையை தள்ளுபடி செய்திருக்கிறார்.

பண பட்டுவாடா போக்குவரத்து நிறுத்தம்

புதுடில்லி, ஆக 18—

இந்தியாவுக்கும்—கோவா, டையூ, டாமன் பகுதிகளுக்கும் இடையே, 'மணியார்டர்', வி. பி. பி. முதலிய பண பட்டுவாடா சம்மந்தமான வேலைகள் தற்காலிகமாக—உடனடியாக நிறுத்தப்பட்டிருப்பதாக தபால்—தந்தி இலாகா தலைமை அதிகாரி அறிவித்திருக்கிறார்.

உயிருடன் கொளுத்தப்பட்டாராம்

விஜயவாடா, ஆக. 18—

சபராலா ஜெகன் மோகன் ராவ் என்ற மற்றொரு ஆந்திர கல்லூரி மாணவரும் கோவா போராட்டத்தில் உயிர்நீத்திருப்பதாகத் தெரிய வருகிறது.

அந்த மாணவர் உயிருடன் கொளுத்தப்பட்டாராம்—போர்ச்சுகீசிய வெறியர்களால்!

ஏகாதிபத்திய வெறிக்கு சென்னையின் கண்டனம்

நகர் முழுதும் செயலற்றது! மாபெரும் ஊர்வலங்கள்! மகத்தான மக்கள் கூட்டம்!

அமைதியுடன் நடைபெற்ற கண்டன நிகழ்ச்சிகள்

தி. மு. கழகம் ஏற்ற பெரும் பங்கு

(நமது நிருபர்)

கோவா விடுதலைப் போராட்ட வீரர்களை போர்ச்சுகீசியர்கள் படுகொலை செய்ததைக் கண்டிக்கவும், உயிர்த் தியாகம் புரிந்த வீரர்களுக்கு வணக்கம் செலுத்தவுமாக சென்னை நகரில் நேற்று 'பூரண ஹர்த்தால்' மேற்கொள்ளப்பட்டது; சென்னை நகர் நேற்று செயலற்றுப் போயிற்று.

பள்ளிகள், கல்லூரிகள், கடைகள், பாங்கிகள், வணிக நிலையங்கள், சர்க்கார் அலுவலகங்கள், நீதிமன்றங்கள் முதலியன வேலை செய்யவில்லை; நகரின் போக்குவரத்து முழுவதுமாக நிலை நின்றது.

சினிமா, நாடகம் போன்ற கேளிக்கைக்கூடங்கள் மூடப்பட்டன; உணவு விடுதிகள் மூடப்பட்டன; வெறிச்சோடிப் போன வீதிகளில், ஆங்காங்கே, கோவா வீரர்களுக்கு வணக்கம் செலுத்தவும், ஏகாதிபத்திய அடக்குமுறை வெறிப்போக்கைக் கண்டிக்கவுமாக மாணவர்கள், தொழிலாளர்கள், அலுவலக ஊழியர்கள், கடை சிப்பந்திகள், நடுத்தர மக்கள் எல்லோருமாக பெரும் ஊர்வலங்கள் நடத்தினர்.

சென்னை திரு. வி. க. திடலிலிருந்து (சான்ராண்ஸ்மித் நகர் மைதானம்) ஒரு மாபெரும் ஊர்வலம் மாலை 3-30 மணி அளவில் புறப்பட்டது.

ஊர்வலத்தில் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள், பாட்டாளிகள், மாணவர்கள், பொதுமக்கள் முதலியோர் பங்கேற்றனர்.

திராவிட முன்னேற்றக் கழகம், கம்யூனிஸ்டு, சோஷலிஸ்டு, ம. சோ. இளைஞர் கழகம், சென்னை தொழிற் சங்கம் (பக்கிங்காம் கர்னடிக் ஆலைத் தொழிலாளர்கள்) ம. சோ., பாரதீய ஜனசங்கம், இந்திய தேசியத் தொழிற் சங்கக் காங்கிரஸ், இந்து மஜ்தூர் சபா, தமிழரசுக் கழகம் முதலிய பல்

(4-ம் பக்கம் பார்க்க.)

தலைமைக் கழகம் : அறிக்கை—26/55

கோவா விடுதலைப் போராட்டம்

இந்தியத் துணைக்கண்டத்தைப் பகுதி பகுதியாகப் பிரித்து அடக்கி, ஆதிக்க ஆட்சி நடத்திவந்த ஆங்கில—பிரெஞ்சு வல்லரசுகள், உலகியல் நிலைமையை ஒட்டியும் ஆங்காங்கு வளர்ந்துவரும் விடுதலை வேட்கை உணர்ச்சிக்கு மதிப்பு அளிக்கும் வகையிலும் தாம் அடக்கி ஆண்ட பகுதிகளைவிட்டு அண்மையில் வெளியேறிவிட்டன; ஆனால், அவைகளைவிட வலுவிலும் அளவிலும் மிகச் சிறிய போர்ச்சுகீசிய வல்லரசு, இந்தியத் துணைக்கண்டத்தைச் சேர்ந்த மிகச் சிறிய பகுதிகளான கோவா—டையூ—டாமன் ஆகியவைகளை இன்னமும் தன் ஆதிக்க வெறிப் பிடியின்கீழ் வைத்துத் துவைத்துச் சுவைக்க எண்ணிக்கொண்டிருக்கிறது; இது, உலகமேலோர் ஒப்புக்கொள்ள முடியாத அடாத செயலாகும்.

அடிமைப்பட்டுக் கிடக்கும் கோவா—டையூ—டாமன் ஆகிய பகுதிகளை விடுவிக்க, உள்ளும் புறமும் உள்ள மக்கள், இப்பொழுது அறப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள். அமைதியான அறப்போராட்டத்தின் மூலம் நிலைமையை உலகோர்க்கு அறிவிக்கவும், அவர்களின் ஆதரவைப் பெறவும், போர்ச்சுகீசிய அரசைப் பணிய வைக்கவும் இந்தியத் துணைக்கண்டத்தைச் சேர்ந்த விடுதலை வீரர்கள் அரும் பாடுபட்டு வருகின்றனர். இப்படி அமைதியான அறப்போராட்டத்தில் ஈடுபட்டு, கோவா—டையூ—டாமன் எல்லையில் நுழையும் வீரர்களை, விலங்குகளைச் சுட்டு வீழ்த்துவதுபோல் போர்ச்சுகீசிய அரசு வீழ்த்திக்கொண்டிருக்கும் செயல், இன்றைய நாகரீக அரசியல் முறைக்கு ஒவ்வாத செயலாகும்.

எனவே, அந்தச் செயலை தி. மு. கழகம் வன்மையாகக் கண்டிக்கிறது

'முப்பதுக்கு மேற்பட்டவர்கள் சுட்டு வீழ்த்தப்பட்டு உயிர் துறந்தனர்,' என்ற செய்தி, நெஞ்சைத் துடிக்க வைக்கிறது. அந்த உயிர் நீத்த விடுதலை வீரர்களுக்கு தி. மு. கழகம் இதன்மூலம் தன் வீர வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

விடுதலைப் போராட்டத்தில் காயமுற்று வருந்துவோருக்குக் கழகம் தன் ஆழ்ந்த பரிவை இதன் மூலம் காட்டிக்கொள்கிறது

'கோவா—டையூ—டாமனை விடுவித்து, அங்கு அமைதியை நிலைநாட்ட எல்லா வித முறையான நடவடிக்கைகளையும் இந்தியப் பேரரசு எடுத்துக்கொள்ள வேண்டும்' என்று, அதனை, கழகம் இதன் மூலம் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது,

போர்ச்சுகீசிய வல்லரசின் செயல்களைக் கண்டித்தும், விடுதலைப் போராட்ட வீரர்களைப் பாராட்டியும், விடுதலை வீரர்களுக்கு உணர்ச்சியும், ஊக்கமும் அளிக்கும் வகையில், ஆங்காங்குள்ள கிளைகள் தீர்மானம் நிறைவேற்றுமாக!

"அறிவகம்," சென்னை 19-8-1955

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

டில்லி முடிவு?

புதுடில்லி, ஆக. 18—

கோவா படுகொலைகளின் விளைவாக ஏற்பட்டுள்ள நிலைமை பற்றி இந்திய சர்க்காரால், இன்று முக்கியமான முடிவுகள் மேற்கொள்ளப்படும் என்று தெரியவருகிறது.

எண்ணம் இல்லையாம்!

புதுடில்லி, ஆக. 17—

"காந்தியார் சுட்டு வீழ்த்தப்பட்ட இடத்தை விலைக்கு வாங்கி, அங்கு ஒரு நினைவுச் சின்னம் எழுப்பும் எண்ணம் சர்க்காருக்கு இல்லை," என்று ராஜ்யங்கள் சபையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நன்றி கலந்த வணக்கம்

"18—8—55-ம் நாளன்று சென்னை நகரில் நடைபெற்ற கோவா படுகொலைக் கண்டன ஊர்வலம்—பொதுக்கூட்டம் ஆகிய நிகழ்ச்சிகளில் தி. மு. கழகத் தலைமைக் குழு சார்பில் விடப்பட்ட குறுகிய கால வேண்டுகோளுக்கேற்ப, சென்னை மாவட்டக் குழு உள்ளிட்ட எல்லா தி. மு. கழகக் கிளைகளும் பெரும் பங்கேற்று சிறப்பித்தமைக்கும், கட்டுப்பாடு—கண்ணியம் ஆகியவைகளிலிருந்து சிறிதும் தவறாது, கடமை உணர்ச்சியுடன் பணியாற்றியமைக்கும் தி. மு. கழகத் தலைமைக் குழு சார்பிலும், பொதுச் செயலாளர் சார்பிலும் எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்."

என். வி. நடராசன்,
துணைப் பொதுச்செயலாளர்,
தி. மு. கழகம்

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்

சென்னை 19—8—'55 வெள்ளி

'போராட்ட உள்ளம்'

" தாடி வளர்ப்போம் ";

" அரைகுறையாக ஆடை அணிந்து அலுவலகம் வருவோம் ";

" முதல் வாரத்தில் பனியன், அரைக்கால் சட்டை !"

" அடுத்த வாரம், பனியனையும் கழற்றிவிட்டு, வெறும் அரைக்கால் சட்டை மட்டும் !"

" அதற்கடுத்த வாரம் 'லங்கோடு' மட்டும் அணிந்து கொண்டு, இப்படி, படிப்படியாக ஆடைகளைக் குறைத்துக்கொண்டு, அலுவலகம் செல்வோம் !"

என்று, டில்லி மத்திய சர்க்கார் அலுவலக மூன்றும் பிரிவு குமாஸ்தாக்கள், சம்பள உயர்வுக் கோரிக்கையை நிறைவேற்றிக்கொள்வதற்கான தங்களின் 'நேரடி நடவடிக்கை' என்று கூறி, போராட்ட திட்டம் ஒன்றை, கடந்த கிழமை வெளியிட்டனர் !

இப்போது, அந்த 'நேரடி நடவடிக்கை'யில் ஈடுபட்டால், தகுந்த ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுமென சர்க்கார் விடுத்த எச்சரிக்கைக்கு அஞ்சியோ, அல்லது, கோரிக்கைகளை நிறைவேற்றித் தருவதற்கு ஒத்துழைப்பதாக சில மக்கள் சபை உறுப்பினர்கள் தந்துள்ள வேண்டுகோளுக்கு செவிசாய்த்தோ 'போராட்டத்'தை மேற்கொள்ளுவதில்லை—என்று, அந்த குமாஸ்தாக்கள் முடிவு செய்திருக்கின்றனர்.

முதலில், குறிப்பாக சர்க்கார் ஊழியர்கள்—பொதுவாக நடுத்தர வாழ்க்கை நிலையிலிருப்போர், பெரும்பாலாக, 'உள்ளதைக் கொண்டு நல்லதைச் செய்வோம்' என்றெண்ணுபவர்கள் !

" தங்களுக்கு வாழ்க்கையில் போதுமான வசதிகளிருக்க மாட்டாது ; மேலும் வசதிகள் வேண்டும்' என்ற ஆசை இருக்கும் ; தங்களுக்கு ஏன் அந்த வசதிகள் கிடைக்கவில்லை—என்பதை ஆராய்ந்து தெரிந்துகொள்ளும் அறிவும் படைத்தவர்கள் ; என்றாலும், அந்த வசதிகளைப் பெறுவதற்காகப் போராட வேண்டும்,' என்ற உள்ளம் இல்லாதவர்கள், இந்த நடுநிலை வாழ்க்கையிலிருப்போர்," — என்று, பொதுவாகவே கூறப்படுவதுண்டு

"தங்களின் வாழ்வு, நிலைபெற்று, பூரண வசதிகள் படைத்ததாக இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிற அவர்கள், அந்த வசதிகளைத் தேடிப் பெறுவதில் போதுமான 'அக்கரை' காட்டமாட்டார்கள் ; பிறர் எவரேனும் அந்த வசதிகளைத் தேடித் தந்தால் பெற்றுக்கொள்வர்,' என்றும் அவர்களைப் பற்றிக் கூறப்படுவதுண்டு.

அந்தகு மனேநிலையில் உள்ள சர்க்கார் ஊழியர்கள், தங்கள் கோரிக்கைகளைத் தெரிவித்து, 'அந்தக் கோரிக்கைகளை ஈடேற்றிக் கொள்ள போராடப் போகிறோம்,' என்று அறிவித்ததே, அவர்களது மனேநிலையில் ஒரு 'புரட்சிகரமான மாற்றம்' நிகழ்ந்திருப்பதாகக் கொள்ளக் கூடியதுதான்.

" தாடி வளர்ப்போம் ! 'அரை மனிதர்'களாக அலுவலகம் வருவோம் !" என்றெல்லாம் அவர்கள் வகுத்த போர் முறை, அவர்களைக் 'கேலி'ச் சித்திரங்களாக்கக் கூடியதுதான் ; ஆனாலும், அவர்கள் தங்களைத் தாங்களே 'கேலிச் சித்திர'ங்களாக்கிக் கொள்ளத் துணிந்ததற்குக் காரணம், அவர்கள் வாழ்க்கையில் படும் அவதி—தங்கள் கோரிக்கைகளுக்கு சர்க்காரின் செவி சாய்க்க மறுக்கும் போக்கு—ஆகியவைதான் என்பது புலனாகக்கூடும்.

" சர்க்கார் ஊழியர்கள் சர்க்காரின் முதுகெலும்பு போன்றவர்கள் ; அவர்களது கோரிக்கைகளில் நியாயமானவற்றை சர்க்கார் நிறைவேற்றிவைக்க வேண்டும்," என்று கூறப்படுவதை, 'நல்ல நிர்வாகம் வேண்டும்,' என்றெண்ணுகிற எவரும் ஏற்றுக்கொள்ள மறுக்க மாட்டார்கள்.

சர்க்காரும், இந்த நிலைகளை உணர்ந்தாக வேண்டும்.

" 'போராட்டத்தில் ஈடுபட்டால் நடவடிக்கை எடுப்போம்' என்று மிரட்டினேம்—போராட்டத்தைக் கைவிட்டு விட்டார்கள்," என்று எண்ணி, சர்க்கார் வாளாவிருந்துவிடக் கூடாது.

ஏனெனில், 'போராடியேனும் பெறுவோம்,' என்ற உள்ளத்தை ஒருமுறை பெற்றுவிட்டவர்கள் — தங்களைக் 'கேலிச் சித்திரங்'களாக்கிக் கொள்ளத் துணிந்துவிட்டவர்கள்—மிரட்டல்களால் அடங்கி விடமாட்டார்கள் !

இன்று போராட்டத்தை ஒத்திப் போட்டிருக்கலாம் ; மீண்டும் போராட்டம் துவங்க நாள்கூட ஆகலாம்; ஆனல், 'போராட்ட உள்ளமே' பெறுவது கடினம்—அப்படி, இந்த குமாஸ்தாக்கள் போராட்ட உள்ளத்தைப் பெற்றுவிட்டால், நிச்சயம் என்றேனும் ஒருநாள் தங்கள் கோரிக்கையை ஈடேற்றிக்கொள்ள களம் புகுவர் என்பதை சர்க்கார் உணர வேண்டும்.

டில்லி சர்க்கார் ஊழியர்களின் 'போராட்ட உள்ளம்,' சென்னை மாநில சர்க்கார் ஊழியர் போன்று, 'எல்லாம் தெரிந்தும், ஏதும் பெறமுடியாதவர்களாக ஏங்கித் தவிப்போர்க்கு' ஒரு எடுத்துக் காட்டு !

அடுத்த தலைமுறைக்கு திட்டம் தீட்டுகின்றனர் !

ஜினீவா, ஆக. 16—

வீடுகளுக்கும், தொழில் நிறுவனங்களுக்கும் தேவையான மின்சார சக்தியை, மிகக் குறைவான செலவில், நீர்வளிக் குண்டில் வெளியாகும் சக்தி போன்ற அணு சக்தியிலிருந்து அடுத்த தலைமுறையிலாவது பெற முடியுமென நம்பப்படுகிறதாம் !

சீனவுடன் அரசியல் உறவு

பேச்சு வார்த்தைகள் நடத்த விரும்பவில்லையாம் !

ஜப்பான் மந்திரி அறிவிப்பு

டோக்கியோ, ஆக. 17—

'ஜப்பானுக்கும் — சீனவுக்குமிடையே அரசியல் உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளலாம்,' என்று சீன விடுத்திருந்த கோரிக்கையை ஜப்பான் வெளிநாட்டிலாகா மந்திரி ஷிகெமிட்சு மறுத்திருக்கிறார்.

சீனவில் சிறைவைக்கப்பட்டிருக்கும் ஜப்பான் குடி மக்களை மீட்பதற்காக மட்டுமே சீனவுடன் பேச்சு வார்த்தை நடத்தத் தயாராயிருப்பதாக அவர் அறிவித்திருக்கிறார்.

'இரு நாடுகளுக்குமிடையே அரசியல் உறவுகளை ஏற்படுத்திக் கொள்வது பற்றி பேச்சு வார்த்தைகள் நடத்தவேண்டும்,' என்று பீகிங் வானெலி, கடந்த சில வாரங்களுக்குள் மூன்றும் முறையாகத் தெரிவித்திருக்கிறது.

'ஜப்பான் அரசாங்கம், வேறு பிரச்சினைகள் எதுவும் பற்றிப் பேசுவதற்குத் தயாராக இல்லை,' என்று, ஷிகெமிட்சு தெரிவித்துவிட்டிருக்கிறார்.

" பீகிங் செல்லும் யோசனை பற்றி பரிசீலிக்கிறேன் ; அல்லது, சில பிரதிநிதிகளை அங்கு அனுப்புகிறேன் " என்று, இரண்டு திங்கள் முன்பாக ஜப்பானியப் பிரதமர் ஹடோயாமா, மக்கள் சபையில், இரு சோஷலிஸ்டுகளுக்கு பதிலளிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

முன்னள் பாக்.பிரதமர்

விலையுயர்ந்த பொருள்களை விற்பதற்குக் காரணம் ?

பாகிஸ்தானின் முன்னள் பிரதமரான முகமது அலி, ஐக்கிய நாடுகளுக்குச் செல்லும் தூதுக் குழுவிற்குத் தலைமை ஏற்றுச்செல்வார் என்று தெரிகிறது.

அவர், தம்முடைய விலையுயர்ந்த 'காடிலாக்' காரையும் விற்பனை செய்ய இருப்பதாகவும் தெரிவித்துள்ளாராம். அத்துடன், தம்முடைய வீட்டிலுள்ள 'ரேடியோகிராம்'கள், சிற்றுண்டிக்கு தேவையான சாதனங்கள், மற்றும் பல பொருட்களையும் ஏலத்தில் விற்கிருக்கிறார்.

தற்போது அமெரிக்காவிலுள்ள பாகிஸ்தான் தூதுவரான ஸையீத் அம்ஜத் என்பார் விரைவிலேயே பாகிஸ்தான் திரும்பிவந்து, பாக். சர்க்காரின் வெளிநாட்டு அமைச்சராகப் பணியாற்றுவார் என்று கூறப்பட்டிருக்கிறது.

பின்னர், முகமது அலி, மீண்டும் ஸையத் அம்ஜத் அலியை தம்முடைய பதவியில் அமர்த்துவார் என்று எதிர்பார்க்க முடியாதென்றும் தெரிகிறது.

முகமதலி, தமது இரண்டாவது மனைவியான பீகம் முகமதலியையும் உடனழைத்துச் செல்வாராம் !

அவரது முதல் மனைவியான அமீதா பீகம் அலி, தம்முடைய இரு பிள்ளைகளுடன் லண்டனுக்குச் செல்ல இருக்கிறாராம்.

முகமதலி, பாக் பிரதமராகப் பதவி ஏற்பதற்கு 2 ஆண்டுகளுக்கு முன்னர் வரையிலும், இரங்கூன், ஒட்டாவா, வாஷிங்டன் ஆகிய இடங்களில் பாக். தூதுவராலய அதிகாரி பதவிகளை வகித்து வந்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

விவசாயப் பொருட்கள் உற்பத்தி இரட்டிப்பாகும்?

புதுடில்லி, ஆக. 17—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் இறுதியில் விவசாயப் பொருட்களின் உற்பத்தியை இரட்டிப்பாக ஆக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமாறு மாநில சர்க்கார்கள் திட்டக் குழு கேட்டுக்கொண்டுள்ளதென்று டில்லி மேல்சபையில் உதவி திட்ட அமைச்சர் எஸ். என். மிஸ்ரா தெரிவித்திருக்கிறார்.

ஆசியாவிலேயே மிகப் பெரிய தொழிற்சாலையாம் !

4,000 தொழிலாளர்கள் பணியாற்றுவராம்

ஒரு இரயில் பெட்டியைத் தயாரிக்க 735 இயந்திரமாம்

சென்னைக்கு அருகில் பெரம்பூரில் சுமார் ரூ. 7,30,00,000 செலவில் இந்திய சர்க்கார் அமைத்துவரும் இரயில் பெட்டி உற்பத்திச் சாலையில், புது மாதிரியான 'முழுப் பெட்டி'கள் உற்பத்தியை, அக்டோபர் 2-ந் தேதியன்று பிரதம மந்திரி நேரு துவக்கிவைப்பார்.

சுமார் 50 ஏகர் பரப்பளவில் நிர்மாணிக்கப்பட்டுவரும் பெரம்பூர் இரயில் பெட்டி உற்பத்திச்சாலை ஆசியாவிலேயே மிகப் பெரியதாகவும், உலகத்திலுள்ள மிகப் பெரிய தொழிற்சாலைகளுள் ஒன்றாகவும் விளங்கக்கூடுமாம் !

உற்பத்தித் திட்டம்

இந்தத் தொழிற்சாலை வேலை துவங்கிய முதல் ஆண்டில் இருபது இரயில் பெட்டிகளைத் தயாரிக்கும் இவை முழுவதும் ஸ்விட்ஜர்லாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உறுப்புகளைக்கொண்டே உருவாக்கப்படும். அடுத்துவரும் ஆண்டுகளில், இந்தியாவிலேயே உற்பத்தி செய்யப்பட்ட உறுப்புகளை அதிக அளவில் உபயோகித்துக்கொள்ளத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

இரண்டாவது ஆண்டில் நூறு பெட்டிகள் உற்பத்தி செய்யப்படும் ; பிறகு உற்பத்தி பெருகி மூன்றாவது ஆண்டில் 200 பெட்டிகளும், நான்காவது ஆண்டில் 300 பெட்டிகளும் உற்பத்தி செய்யப்படும். ஆண்டுதோறும் 350 இரயில் பெட்டிகள் உற்பத்தி செய்வதே இந்தத் தொழிற்சாலையின் லட்சிய உற்பத்தி அளவாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஐந்தாவது ஆண்டில்—அதாவது, 1959—60-ம் ஆண்டில் இந்த இலட்சிய அளவு எய்தப்பட்டுவிடுமென்றும், அப்போது இரயில் பெட்டிகளைத் தயாரிப்பதற்கு வேண்டிய எல்லாவிதமான உறுப்புகளும், உபகரணங்களும் பெரம்பூர் தொழிற்சாலையிலேயே உற்பத்தி செய்யப்பட்டுவிடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போதைக்கு மூன்றும் வகுப்பு வண்டிகள் மாத்திரமே இந்தத் தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்டு வரும். பெட்டியின் வெளிப்புறக் கூடுகள் மாத்திரமே இங்கு தயாரிக்கப்படும் ; உட்புற அமைப்புகளை இரயில்வேக்களின் மற்ற தொழிற்சாலைகள் செய்து முடிக்கும்.

ஒரு பெட்டியைத் தயாரிக்க 735 இயந்திரங்கள் !

பெரம்பூர் இரயில் பெட்டி உற்பத்திச் சாலையில், உற்பத்தி உச்சத்தை எட்டும்போது, ஆறு மணி நேரத்துக்கு ஒரு பெட்டி வீதம் தயாராகி வரும். இதைச் செய்து முடிக்க பல்வேறு வகைப்பட்ட மொத்தம் 735 இயந்திரங்கள் இந்தத் தொழிற்சாலையில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. பத்து பெரிய பட்டறைகள் கொண்டதாக தொழிற்சாலை இருக்கும். இவற்றுள் மிகப் பெரிய பட்டறை 1,000 அடி நீளமும், 260 அடி அகலமும் உள்ளதாக இருக்கும் ; இவ்வளவு பெரிய பட்டறை இந்தியாவில் வேறெந்தத் தொழிற்சாலையிலும் இல்லையென்றே சொல்லலாம்.

இந்தப் பட்டறைகளுக்குள் மொத்தம் 12 மைல் நீளத்துக்கு இரயில் பாதைகள் போடப்பட்டுள்ளன. மொத்தம் 84 லட்சம் சதுர அடி பரப்பைக் கொண்ட இந்தப் பட்டறைகளை தூசியே இல்லாமல் எப்போதும் சுத்தமாக வைத்துக் கொள்ள பிரத்தியேக சாதனங்கள் அமைக்கப்பட்டுள்ளன ; எல்லாப் பட்டறைகளிலும் நல்ல காற்றோட்டம் இருக்கிறது ; பிரகாசமான வெளிச்சம் கொடுக்கும் குழாய் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. நிர்வாகிகள் தொழிலாளர்களுடன் உடனுக்குடன் நேரிடையான தொடர்பு கொள்ளுவதற்கு வசதியாகப் பட்டறைகளின் பல பகுதிகளிலும் ஒலிபெருக்கிகள் அமைக்கப்பட்டுள்ளன. தொழிலாளரின் உபயோகத்துக்காக சிற்றுண்டிச்சாலைகளும், சாப்பாட்டு அறைகளும், குளிக்கும் அறைகளும் மற்ற வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

நவீன தொழிற்சாலைகளில் உள்ளது போன்ற 'ஒரு வழி' உற்பத்தி முறையே பெரம்பூர் தொழிற்சாலையிலும் அனுசரிக்கப்படும் ; அதாவது—கச்சாச் பொருள்கள், தொழிற்சாலையின் ஒரு கோடியில் உள்ளே நுழைந்து, பல்வேறு பட்டறைகள் வழியாகச் சென்று, இரயில் பெட்டியின் உறுப்புகளாக மாறி, இறுதியில் முழு இரயில் பெட்டியாக உருவெடுத்து, தொழிற்சாலையின் மறு கோடியிலிருக்கும் வாயில் வழியாக வெளிச் செல்லும்.

உற்பத்திச் சாலையின் பல்வேறு பட்டறைகளும் இதற்கேற்பவே அமைக்கப்பட்டுள்ளன. இந்த முறையை அனுசரிப்பதால், உற்பத்தி தங்குதடையின்றி நடைபெறுவதுடன் செலவும் மிச்சப்படுகிறது.

எட்டு ஐரோப்பிய நாடுகளின் சதவிகிதம்

உற்பத்திச் சாலைக்கு வேண்டிய இயந்திர சாதனங்களை எட்டு ஐரோப்பிய நாடுகள் விநியோகம் செய்கின்றன. இயந்திர சாதனங்களில் 60 சதவிகிதம் ஜெர்மனியிலிருந்தும், 15 சதவிகிதம் சுவிட்சர்லாந்திலிருந்தும், மற்றொரு 15 சதவிகிதம் பிரிட்டனிலிருந்தும், மற்றவை செக்கோஸ்லவோகியா, பிரான்ஸ், இத்தாலி, பெல்ஜியம், சுவீடன் ஆகிய நாடுகளிலிருந்தும் தருவிக்கப்படுகின்றன.

4,000 தொழிலாளர்கள் பணி புரிவராம் !

தொழிற்சாலையில் உற்பத்தி முழு மூச்சில் நடைபெறும்போது சுமார் 4,000 தொழிலாளர்கள் இதில் இருப்பார்கள். அவர்களில் 75 சதவிகிதம்பேர் தொழில் நுட்ப பயிற்சி பெற்றவர்களாக இருப்பார்கள். இவர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக, தொழிற்சாலை இடத்திலேயே தொழில் நுட்பப் பயிற்சிப் பள்ளிக்கூடமொன்று 1954 மார்ச் 20 ந் தேதியன்று ஆரம்பிக்கப்பட்டது. இந்தப் பள்ளிக்கூடத்தில் ஆண்டுதோறும் 500 பேருக்குப் பயிற்சியளிக்கப்படும். நவீன பயிற்சி முறைகள் இங்கு கையாளப்படுகின்றன ; இதற்கென்று பிரத்தியேகமாக தனிப் பட்டறைகளும் உள்ளன.

8,000 டன் உருக்காம் ! 20,000 டன் சிமெண்டாம் !

ஆசியாவிலேயே மிகப் பெரியதான இந்தத் தொழிற்சாலையைக் கட்டி முடிக்க சுமார் 8,000 டன் உருக்கும், 20,000 டன் சிமெண்டும் செலவாயிருக்கிறது. மொத்தம் 12 மைல் நீளத்திற்குத் தண்ணீர் சப்ளை குழாய்களும் $5\frac{1}{2}$ மைல் நீளத்திற்கு பாதைகளும் இந்தத் தொழிற்சாலைக்குள் போடப்பட்டிருக்கின்றன.

தொழிற்சாலையை அடுத்து தொழிலாளர்களுக்குக் குடியிருப்பு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. சுமார் 400 வீடுகள் கொண்ட சிறிய நகரமொன்று இப்போது இங்கு நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகக் கூறலாம். சிப்பந்திகள் வசிப்பதற்கு வசதியான வீடுகளும், பொழுதுபோக்குவதற்குப் பூங்காவனங்களும், விளையாட்டு மைதானங்களும், நேர்த்தியான தொரு கட்டிடமும், தற்கால வசதிகள் பிறவும் இங்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

தொழிற்சாலைக்கும், தொழிலாளர் பேட்டைக்கும் ஆண்டுதோறும் 60 லட்சம் யூனிட் மின்சார சக்தி விநியோகம் செய்வதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

கலையும், தொழிலும் கலந்த படிப்பு

மாணவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கு நல்லதோர் வாய்ப்பு

தொழிற் கல்வித் திட்டம் பரப்பப்படும் விதம்

அமெரிக்காவில் உயர்தரப் பாடசாலைக் கல்வித் திட்டத்தில் தொழிற் கல்வி இன்றியமையாத ஓர் அம்சமாக விளங்குகிறது.

14 வயதுக்கு மேற்பட்ட யாவரும் இலவசமாகத் தொழிற்கல்வி பெறலாம்; தொழிற் கல்வி பெறுவோர் இருவகையினராவர் :—

முழு நேரப் பள்ளிகளில் தொழிற் கல்வியும், கலைப் பயிற்சியும் பெறும் இளைஞர்கள், பயிற்சி முடிந்தபின் உயர்தரப் படிப்பில் தேர்ச்சி பெற்றதாகத் தகுதிச் சீட்டுப் பெறுகிறார்கள்; அவர்களுள் பலர், மேற்படிப்புப் படிப்பதற்காகக் கல்லூரிகளில் சேருகிறார்கள்.

2. வேலை செய்துகொண்டே, குறை நேரத்தில், தொழிற் பயிற்சி பெறுவதற்காகப் பள்ளிக்கு வருவோர்.

மத்திய அரசாங்கத்தின் கல்வி இலாகாவின் தொழிற்பகுதி—விவசாயம், குடும்பப் பொருளாதாரம், வாணிபம், தொழில்—என்னும் கிளைகள் மூலமாய், தொழிற் கல்வியை நிர்வகிக்கிறது.

விவசாயத் திட்டம்

விவசாயத் துறையில் கல்வி அளித்து விவசாயிகளை அதிகத் திறமையுள்ளவர்கள் ஆக்குகிறார்கள், வருங்கால விவசாயிகளுக்கும் பயிற்சி அளிக்கிறார்கள்.

பண்ணையிலும், பள்ளியிலும் பயிற்சி அளிக்கிறார்கள். பண்ணை இயந்திரங்களைப் பற்றியும், மண் வளத்தையும், மற்றும் இயற்கை வளங்களைப் பாதுகாப்பது பற்றியும், திறமையாய்ப் பயிர்களை விளைவிப்பது பற்றியும், விளைவை விற்பது பற்றியும், உணவைப் பாதுகாப்பது பற்றியும் மாணவர்கள் பயில்கிறார்கள்.

பள்ளிகளில் மாணவர்கள், இப்பயிற்சியைப் பெறுவதால், முற்போக்கான விவசாய முறைப்படி விவசாயம் நடைபெறுகிறது; யாவரும் புது முறைகளைக் கையாள்கிறார்கள்.

குடும்ப பொருளாதார படிப்பு

குடும்ப நலத்துக்குரியவற்றைக் கற்பிப்பதே இந்தப் பயிற்சியின் நோக்கம். பொருள்களைத் தெரிந்து கொள்ளல், விலைக்கு வாங்குதல், உணவுப் பொருள்களைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்ளல், வீட்டில் நோயாளிகளைப் பார்த்தல், முதல் உதவி செய்தல், குடும்பத்துக்கும்—சமுதாயத்துக்கும் உள்ள தொடர்பை அறிந்து கொள்ளுதல் ஆகியவையெல்லாம் கற்பிக்கப்படுகின்றன.

வாணிபமும், தொழிலும் பற்றிய கல்வி

பொருள்களைச் செய்யு முன் அவற்றை எவ்வாறு செய்வது என்று வரைந்து கொள்வதற்கும், அவற்றைச் செய்வதற்கும், இணைப்பதற்கும் பயிற்சி அளிக்கிறார்கள். அவர்களுக்கு வேலை கிடைக்க ஆயத்தப் பயிற்சி அளிப்பதே இதன் நோக்கம்.

உயர்தரப் பாடசாலைகளில் மாணவர்கள் சரித்திரம், விஞ்ஞானம், ஆங்கிலம் முதலிய பாடங்களைப் படிப்பதுமன்றி, தொழில்களிலும் பயிற்சி பெறுகிறார்கள். விஞ்ஞானம், சித்திரம், கணிதம் இவற்றில் பெற்ற அறிவைத் தொழில் பயிற்சியில் பயன்படுத்தலாம்.

தச்சு வேலை பழகுகிறவர்கள் உண்மையான வீடுகளையே கட்டுகிறார்கள். ரொட்டி சுடப் பழகுகிறவர்கள் ரொட்டி சுட்டு விற்கிறார்கள்—அல்லது உண்கிறார்கள்.

மேற்கூறியவை யாவும் முழு நேரப் பள்ளிகளில் படிப்போர் பெறும் தொழிற் பயிற்சி. இது மட்டுமின்றி வேலை செய்வோருக்கும் தொழிற் பயிற்சி அளிக்கப்படுகிறது; அவர்கள் தங்கள் அறிவைப் பெருக்குவதற்கு இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது இது மூவகைப்படும் :—

வேலை செய்வோர், வேலை நேரத்தின் ஒரு பகுதியில் சித்திரம், விஞ்ஞானம் முதலியவற்றைத் தொழிலுக்குத் தொடர்புபடுத்திப் படிக்கிறார்கள்; இது, முதல்வகை

முழு நேரம் வேலை செய்பவர்கள், இரவில், நகை செய்தல், தையல், வெல்டிங் முதலிய பல வேலைகளைப் படிக்கிறார்கள்; இது, இரண்டாவது வகை.

பள்ளி மாணவர் பாதி நேரம் வேலை செய்து, பாதி நேரம் பாடங்களைப் படிப்பது மூன்றாவது முறை; வேலை செய்வதற்கு அவர்களுக்கு ஒழுங்கான சம்பளம் உண்டு.

விற்பனைப் பயிற்சி

விற்பனைத் துறையில் வேலை செய்வோர் விசேட பயிற்சி பெறுகின்றனர்; பண்ணைப் பொருள்களையும், தொழிற்சாலைப் பொருள்களையும் சில்லரையாகவும், மொத்தமாகவும் எவ்வாறு விற்பது என்பது பற்றி அவர்கள் படிக்கிறார்கள்.

பள்ளியில் பல்வகை பயிற்சி

வாணிபத்தின் பல துறைகளிலும் பள்ளி மாணவர் பயிற்சி பெறுகின்றனர். மாணவர் டைப்அடிக்கவும், கணக்கு எழுதவும், தொழில்களை நடத்தவும், குமாஸ்தாக்களாக வேலை பார்க்கவும் படிக்கின்றனர்.

தொழில் நிர்வாகம், தொழில் துறை ஆராய்ச்சி முதலிய உயர்ந்த பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன வகுப்பறைகளில், உயர்தரப் பள்ளி மாணவர்கள், வாணிபப் படிப்புப் படிக்கின்றனர்; வெளியே வாணிப நிலையங்களில் சில மணி நேரம் வேலை செய்து பழகுகின்றனர்.

ஒவ்வொரு மாணவனும், எந்தத் தொழிலைத் தெரிந்தெடுக்கவேண்டுமென்று அவனுக்கு ஆலோசனை சொல்வதற்குரிய ஏற்பாடுகள் உள்ளன; தனித்தனியே, ஒவ்வொரு மாணவனின் திறமையையும் ஆலோசனை சொல்வோர் ஆராய்ந்து, அவனவனுக்கு ஏற்ற வேலை இன்னதென்று சொல்கின்றனர்.

மாநாடுகள் நடத்த மாளிகை

ரூ. 37 லட்சம் செலவில் டில்லியில் அமைகிறது

புதுடில்லி, ஆக. 17—

புது டில்லியில், மாநாடுகள் நடத்துவதற்கென ரூ. 37 லட்சம் செலவில் மூன்று அடுக்கு மாளிகை ஒன்றை அமைக்க இந்திய சர்க்கார் தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது.

'எட்வர்டு அரசர் சாலை'யில் அமையும் இந்த மாளிகை, 'தேசிய, சர்வ தேசிய' மாநாடுகள் நடத்துவதற்கென உபயோகிக்கப்படும்

அடுத்து, 1956 நவம்பர் திங்களில் டில்லியில் கூடவிருக்கும் 'யுனெஸ்கோ' மாநாடு, இந்த மாளிகையில் கூடுவதற்கான வகையில் துரிதமாக கட்டப்பட்டுவிடும் என்று தெரிகிறது.

மாளிகையின் தரை பரப்பளவு 1,30,000 சதுர அடியாக இருக்கும் என்றும், உபதளப் பரப்பு 1,60,100 சதுர அடியாக இருக்கும் என்றும் கூறப்படுகிறது.

மாநாடுகள் நடைபெறுவதற்கான மண்டபம் சுமார் 700 பேர்கள் நாற்காலிகளில் அமரும்வண்ணம், 165'×145' என்ற அளவில் அமையுமாம்.

5 'கமிட்டி' அறைகள் இருக்கும். ஒவ்வொன்றிலும் 70 பேர்கள் குதிரை லாட அமைப்பு மேஜைகளில் உட்கார்ந்து விவாதிக்கத்தக்க வசதிகள் இருக்கும் என்று தெரிகிறது.

மாளிகையின் முகப்பு—கறுப்பு பளிங்குக் கற்களால் அமைந்திருக்கும் என்றும், நவீன கால வசதிகள் அத்தனையும் கூடியதாக மாளிகை விளங்கும் என்றும் தெரியவருகிறது.

பெங்களூரில் பால் விநியோக அபிவிருத்தி

ரூ. 13 லட்சத்தில் நகரசபையின் ஐந்தாண்டுத் திட்டம்

பெங்களூர் நகரில் பால் விநியோகத்தை அபிவிருத்தி செய்வதற்கென, பெங்களூர் நகரசபையினர் ஐந்தாண்டுத் திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளனராம். இத்திட்டத்தை அமுல் நடத்த உத்தேசமாக ரூ. 13 லட்சம் செலவிடப்படலாமென்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

வேலையில்லாக் கால இன்ஷ்யூரன்ஸ்

சர்க்கார் அமுல் செய்யவில்லையாம்!

புதுடில்லி, ஆக. 16—

தொழிலாளர்கள் வேலையில்லாதிருக்கும் காலத்தில் பயன் பெறுவதற்கான இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தை, சர்க்கார் அமுல் செய்யவில்லை என்று தெரியவருகிறது.

திட்டக் குழு; மற்றும் தொழிலாளர், தொழில், வர்த்தகம், நிதி ஆகிய இலாகாக்கள் முதலியனவற்றின் பிரதிநிதிகளடங்கிய செயற்குழு ஒன்று, அம்மாதிரியான இன்ஷ்யூரன்ஸ் திட்டம் வேண்டுமென சிபாரிசு செய்திருந்தது.

அந்த இன்ஷ்யூரன்ஸ் திட்டப்படி, வேலைக்கு வைத்துக்கொள்பவர்களும், வேலை பார்க்கும் தொழிலாளர்களும், கூட்டாக அந்த இன்ஷ்யூரன்சிற்கு பிரீமியம் செலுத்துவர் என்று தெரிகிறது.

இப்போதுள்ள சட்டங்களின்படி, வேலை செய்யாதிருந்தாலும், ஆட்குறைப்பு நடைபெற்றாலும் தொழிலாளர்களுக்கு நஷ்டஈடு கிடைப்பதாகவும், இந்த நஷ்டஈட்டினைக் காட்டிலும் வேலையில்லாக் கால இன்ஷ்யூரன்ஸ் திட்டப்படி கிடைக்கும் நிவாரணம் குறைந்த அளவாக இருப்பதால் இப்போதுள்ள சட்டமே போதும்—புதிய திட்டம் தேவை இல்லை என்று முடிவு செய்யப்பட்டதாகவும் அறியவருகிறது.

கிராமங்களுக்கு மின்சார வசதி

சென்னை, ஆக. 18—

கிராமங்களுக்கு மின்சார வசதி ஏற்படுத்தும் திட்டத்தின் கீழ், அடுத்த நிதி ஆண்டிலிருந்து 1,000 கிராமங்கள் வீதம் மின்சார வசதி ஏற்படுத்த சென்னை மாநில சர்க்கார் உத்தேசித்திருப்பதாகத் தெரிய வருகிறது.

இரயிலை நிறுத்தினர்!

கண்ணாடிக் கதவுகளை உடைத்தெறிந்தனர்

மாணவர்களும் இதரரும் அடங்கிய பெருங்கூட்டம் ஒன்று, ஒரு பிரயாணிகள் இரயிலையும், இராணுவத்தினரை ஏற்றிவந்த இரயிலையும் ஜாம்ஷெட்பூரில் அரை மணி நேரத்திற்கு மேலாக நிறுத்தி வைத்துவிட்டது.

இரயில் வண்டிப் பெட்டிகளின் கண்ணாடி ஜன்னல்கள் சிலவற்றையும், மாணவர்கள் உடைத்தெறிந்தனராம்.

பலாத்காரம் ஏதும் உபயோகிக்காமலேயே நிலை சீர்செய்யப்பட்டதாம்.

கழகச் செய்திகள்

பெங்களூர் மாவட்ட தி. மு. கழகம்

14-8-55 பிற்பகல் 3 மணிக்கு பெங்களூர் மாவட்ட தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம் பிளாக் பள்ளி தி. மு. கழக மனையில் தோழர் எஸ். வி. பதி தலைமையில் நடைபெற்றபோது, பொன்மலை தோழர் ஜி. பராங்குசம் அவர்களது தந்தையார் இயற்கையெய்தியமைக்கு அனுதாபம் தெரிவித்துக் கொண்டும், 18—9—55-ல் அக்கிப்பேட்டை தி. மு. கழக நூல் நிலைய வளர்ச்சிக்காகச் சிறப்புக் கூட்டம் நடத்த அனுமதி வழங்கியும், பெங்களூர் மாவட்ட தி. மு. கழகச் சார்பில் 23—10—55-ல் ஓர் சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டம் நடத்துவதென்றும், முன்னாள் பெங்களூர் மாவட்டச் செயலாளர் தோழர் ஏ. டி. பிரான்சிஸ் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பெங்களூர்— அக்கிப்பேட்டை தி.மு.க.

7—8—55 மாலை 3 மணிக்கு, தோழர் வி. கே. நடேசன் தலைமையில் நடைபெற்ற கழகச் செயற் குழுக் கூட்டத்தில், தோழர் எஸ். வி. பதி அவர்கள் பெங்களூர் மாவட்டச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டமைக்கு மகிழ்ச்சி தெரிவித்தும், கழக நூல் நிலைய வளர்ச்சிக்காக செப்டம்பர் 11-ந் தேதி ஓர் சிறப்புச் சொற்பொழிவு கூட்டம் நடத்துவதெனவும், அக்கிப்பேட்டை கழகச் சார்பில் 17—7—55-ல் நடைபெற்ற பொதுச் செயலாளர் வரவேற்பு, பொதுக்கூட்டத்தின் வரவு-செலவு கணக்குகள் பரிசீலிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மாநில மாநாட்டு நிதிக்காக அக்கிப்பேட்டை கிளைக் கழகம் ரூ 25 தந்துள்ளது. மற்றும் பல மன்றங்களும் நிதி வழங்கியுள்ளன. ஆக மொத்தம் ரூ 108—2—0 கொடுக்கப்பட்டிருக்கிறது.

அறந்தாங்கி தி. மு. கழகம்

5—3—55-ல் கிளைக் கழகச் செயற்குழுக்கூட்டம் தோழர் நா. மாரிமுத்து தலைமையில் நடைபெற்றபோது, கழகக் கட்டிட நிதிக்காக ஓர் நாடகம் நடத்துவதென்றும், தோழர்கள் வ. பிச்சைக் கண்ணு, வீ. வெள்ளச்சாமி ஆகியோரின் விலகல் கடிதம் ஏற்றுக்கொள்ளப்பட்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருச்சி மாவட்ட தி. மு. கழகம்

7—8—55 பிற்பகல் 3 மணிக்கு, துறையூர் தி. மு. கழக அலுவலகத்தில், திருச்சி மாவட்ட தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம், தோழர் ஏ. பி. தர்மலிங்கம் தலைமையிலும், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் முன்னிலையிலும் நடைபெற்றது

மாவட்டச் செயலாளர் அவர்கள், கூட்டம் கூட்டப்பட்டதின் நோக்கத்தை விளக்கியபின், மாநில மாநாட்டு நிதியை அனுப்பாத கிளைகள் விரைவில் அனுப்பிவைக்கக் கேட்டுக்கொண்டும், மாவட்டக் கழக வரவு—செலவு கணக்குகள் ஒப்புக்கொள்ளப்பட்டும், இதுவரை வந்திருக்கிற புதிய கிளைக் கழகங்களில் மரவபாளையம், காட்டுப்புத்தூர், புதூர் உத்தமனூர், திருக்களம்பூர், ம. புதுப்பட்டி ஆகிய கிளைகளை மாவட்டக் கழகத்தில் பதிவு செய்து கொள்வதெனவும், வட்டக் குழு அமைக்க மாவட்டச் செயலாளருக்கு அனுமதி கொடுத்தும், பொதுக் குழு உறுப்பினராக மாவட்டச் செயலாளர் நியமிக்கப்பட்டுள்ளதால், அவருக்குப் பதிலாகக் குளித்தலை தோழர் தி. வீ. முத்துகிருஷ்ணன் அவர்களைத் தேர்ந்தெடுத்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இறுதியாக பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், கழக வளர்ச்சி குறித்துப் பேசியபின், மாவட்டச் செயலாளர் நன்றி கூறலுடன் கூட்டம் முடிவுற்றது. தோழர்களுக்குத் தேநீர் விருந்தளித்த துறையூர் கழகத் தோழர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

ஆற்றூர் (நாஞ்சில் மாவட்டம்) தி. மு. க. துவக்க விழா

11—8—55 மாலை 6 மணியளவில், ஆற்றூர் தி. மு. க.-வின் துவக்க விழா வடசேரி தோழர் ஏ. இராமசாமி தலைமையில் நடைபெற்றது.

துவக்க விழாவில் தோழர்கள் சு. வன்னியப்பெருமாள், கண்ணப்பன், கி. மனோகரன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தோழர் மனோகரன் தி. மு. கழகத்தின் கொள்கைகளை விளக்கியும், திராவிட நாடு தனி நாடாகப் பிரிய வேண்டியதன் தேவையை வலியுறுத்தியும், 'கேரள கௌமுதி' தலையங்கத்தில் தீட்டியுள்ள கருத்துக்களை விளக்கி, அது, கழகக் கொள்கைகள் கேரளத்திலும் ஒலிக்கத் தொடங்கிவிட்டன என்பதற்கான அறிகுறியே என்பதையும் எடுத்துக் காட்டினார்.

பின்னர் மாவட்டச் செயலாளர் தோழர் வி. எம். ஜான் தீர்மானங்களை முன்மொழிந்து சொற்பொழிவாற்றினார். திரு-கொச்சி தமிழ் மக்கள், திரு-கொச்சி தமிழகத்தை தாயகத்தோடு சேர்ப்பதற்கு அயராது உழைக்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டும், மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

சென்னை—கோடம்பாக்கம் தி. மு. கழகம்

14—8—55 காலை 11 மணியளவில் கழகக் கட்டிடத்தில் நடைபெற்ற கழகச் செயற் குழு கூட்டத்தில், செப். 15-ந் தேதியன்று, கிளைக் கழகச் சார்பில் திராவிட நாடு பிரிவினை நாள் பொதுக் கூட்டம் நடத்துவதெனவும், மும்முனைப் போராட்ட நினைவு நாள் சுவரொட்டி செலவையும், அழகிரி நூல் நிலையத்திற்குக் கொடுத்த தொகையையும் ஒப்புக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

காரணம் காட்டாமல் காவலில் வைக்க!

மாவட்ட அதிகாரிகளுக்கு விரிவான அதிகாரம்

காட்மண்டு, ஆக. 17—

உள்நாட்டுப் பாதுகாப்புக்கு பங்கம் விளைவிப்பதான நடவடிக்கைகளில் எவரேனும் ஈடுபடுவதாகத் தெரிந்தால், அவர்களை கைது செய்ய, காவலில் வைக்க, காரணம் ஏதும் காட்டாமலேயே சிறையில் தள்ளுவது முதலிய நடவடிக்கைகளை மேற்கொள்ள மாவட்ட அதிகாரிகளுக்கு விரிவான அதிகாரம் வழங்கி, நேபாள சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கின்றனர் எனத் தெரிகிறது.

மோட்டார் வரி குறையும்?

புதுடில்லி, ஆக. 17—

மோட்டார் வண்டிகள் வரியில் 20 சத விகிதம் குறைத்த விரைவிலேயே அறிவிப்பொன்றை இந்திய சர்க்கார் வெளியிடலாம் என்று கூறப்படுகிறது.

மீண்டும் 'தினத் தந்தி'யின் வழக்கமான பித்தலாட்டம்!

'கோவா நாள்' சர்வ கட்சிக் கூட்டத்தில் நடைபெற்றதென்ன?

துணைப் பொதுச்செயலாளர் விளக்கம்

தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் கீழ்க்கண்ட விளக்கத்தைத் தந்துள்ளார் :—

"கோவா படுகொலையைக் கண்டித்து, 18—8—55 மாலை சென்னைக் கடற்கரையில் நடைபெற்ற சர்வகட்சிக் கூட்டத்தில், கூட்டம் துவக்கப்படுவதற்குமுன் நடைபெற்ற சிறு குழப்பத்தைப்பற்றி 'தினத் தந்தி' தனது வழக்கமான பித்தலாட்டத்தைக் கையாண்டிருக்கிறது.

"நேற்றைய நிகழ்ச்சியில், மற்ற கட்சிகளைவிட பெரும் பங்கும், கண்ணியம்—கட்டுப்பாடு—கடமை உணர்ச்சியுடன் பணியாற்றியதும் திராவிட முன்னேற்றக் கழகத்தினரே யாகும்; எனினும், அது, 'தினத் தந்தி'க்கு மனம் பொறுக்க வில்லைபோலும்; எனவே, மாசு கற்பிக்க முயன்றிருக்கிறது.

"கூட்டத்திற்காக அமைக்கப்பட்டிருந்த பந்தலின்மீது மூவர்ணத் துணி சுற்றப்பட்டிருந்ததுடன், கம்யூனிஸ்டு கட்சிக் கொடியும் கட்டப்பட்டிருந்தது. ஊர்வலம் கடற்கரையை அடைந்ததும், மற்ற கட்சியினர் (தி. மு. கழகம் உட்பட) தங்கள் தங்கள் கொடிகளை மேடைக்கு அருகில் மணலில் சொருகி வைத்துப் பறக்கவிட்டனர். இந்நிலையில், கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் தோழர் ஜீவானந்தம் அவர்கள், அக்கொடிகளை தொலைவில் கொண்டுசெல்லுமாறு ஒலிபெருக்கியின் மூலம் உபதேசம் செய்தார்; கூட்டத்திலிருந்த மற்ற கட்சித் தொண்டர்கள், 'கம்யூனிஸ்டு கட்சிக் கொடியை பந்தலுக்கு மேலே பறக்கவிடும்போது, எங்கள் கட்சிக் கொடி மேடையைச் சுற்றி இருப்பதுகூட தவறு? இது சர்வகட்சிக் கூட்டம்தானே? எனவே, பந்தலின்மீது பறக்கும் கம்யூனிஸ்டு கொடியை இறக்க வேண்டும்; இல்லையேல், எங்கள் கொடிகளையும் பந்தலின்மீது பறக்கவிடுவோம்' என்றனர்.

"இந்நிலையில், நான், தி. மு. கழகத் தோழர்களுக்கும்—பொதுவாக அனைவருக்கும் வேண்டுகோள் விடுக்க, ஒருவாறு அமைதி நிலவிற்று; எனினும், தோழர் ஜீவானந்தம் மீண்டும் தனது இயல்புப்படி, தாக்கிப் பேச ஆரம்பித்தார்; உடனே, பந்தலின் மீது அவரவர்கள் கொடியை உயர்த்த ஒவ்வொரு கட்சித் தொண்டர்களும் ஏறினர்; இதனால் பந்தல் கூரை சரிந்து, சிறு குழப்பம் விளைந்தது; எனினும், உடனடியாக பந்தல் சீர்செய்யப்பட்டது.

"இதற்கிடையில், நானும், மற்ற நண்பர்களும் தி. மு. கழகத் தோழர்களுக்கும்—ஏனையோருக்கும் ஆறுதல் கூறி, அமைதியாக இருக்கும்படி கேட்டுக்கொண்டோம்.

"இதுதான் உண்மைச் சம்பவம்; ஆனால், 'தினத் தந்தி' இதற்கு நேர்மாறுகச் செய்தி வெளியிட்டிருப்பது மன்னிக்க முடியாத குற்றம் மட்டுமல்ல—நேற்று நடைபெற்ற கூட்டத்தின் உயர்ந்த கொள்கைக்கு மாசு உண்டாக்குவதுமாகும் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்."

கைத்தொழில் வாரம்

புதுடில்லி, ஆக. 18—

வரும் செப்டம்பர் 24-ந் தேதி முதல் 30-ந் தேதிவரை கைத்தொழில் வாரம் கொண்டாடுவதென்று அகில இந்திய கைத்தறி போர்டு முடிவு செய்திருக்கிறதாம்.

சொற் பயிற்சிக் கூட்டங்கள்

21—8—55 காலை 10 மணிக்கு, சென்னை 31-வது வட்ட அழகிரி நினைவு மன்றக் கட்டிடத்தில், 'திராவிட நாகரீகமும்-ஆரிய நாகரீகமும்' என்ற தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

21—8—55 மாலை, கரூர் தி. மு கழகக் கட்டிடத்தில், 'தனம்-மனோகரன்' சொற் பயிற்சி மன்றச் சார்பில், தோழர் ப. சக்திவேல் தலைமையில், 'நிலையும் நினைப்பும்' என்னும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

21—8—55 இரவு 7 மணிக்கு, மதுரை, ஆட்டு மந்தை பொட்டல் பந்தில் மீன் மார்க்கட் சமீபமுள்ள அறிவு வளர்ச்சிப் படிப்பகத்தில், தோழர் கே. ஆர். அனிபா தலைமையில், 'நாடு-ஏடு' என்னும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

மதுரை அறிவு வளர்ச்சி படிப்பக உறுப்பினர்கட்கு

22—8—55 இரவு 10 மணிக்கு, மேற்படி படிப்பகக் கட்டிடத்தில், அறிவு வளர்ச்சி மன்ற உறுப்பினர் கூட்டம் நடைபெறும். அதுபோது, படிப்பகத்தின் வரவு-செலவு, படிப்பகத்தின் முதலாவது ஆண்டு விழா நடத்துவது ஆகியவை பற்றி ஆலோசிக்கப்படும்.

கோயிலைச் சிறையாக்கினர்கள்?

பெல்காம், ஆக. 18—

மத்திய பிரதேசத்திலிருந்து சென்ற 'சத்தியாக்கிரகி'கள் 500 பேர்களை, போர்ச்சுகீசிய சிப்பாய்கள், கோயில் ஒன்றின் பாழடைந்த மண்டபத்தினுள் அடைத்துவைத்தனராம்! நூறு பேர்கூட தங்க முடியாத அங்கு, 500 பேர் அடைக்கப்பட்டு கொடுமைப்படுத்தப்பட்டனராம்!

'அபயக் குரல்!'

கோவா விடுதலைப் போராட்டத்தை நிறுத்தவோ திரும்பப் பெறவோ வேண்டாமெனக் கோரி கோவானியர் பலர் 'அபயக் குரல்' எழுப்பியுள்ளனராம்!

இனி இந்தியத் தொண்டர்கள் தனியாக உயிர்விட வேண்டியிருக்காதென்றும், இந்தியத் தொண்டர்களை போர்ச்சுகீசியரின் குண்டுகள் கொல்லும் முன்பு தாங்கள் உயிர்விடத் தயாராயிருப்பதாகவும், அவர்கள் உறுதி கூறியிருக்கின்றனராம்.

குடியிருப்பு வாடகைக் கட்டுப்பாடு சட்டம்

சென்னை, ஆக 18—

சென்னை குடியிருப்பு வாடகை கட்டுப்பாடு சட்டத்தை, 1955 செப்டம்பர் 30-ந் தேதியிலிருந்து மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்க மராமத்து இலாகா மந்திரி கொண்டுவந்த மசோதா சென்னை சட்டசபையில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

நெல்லை மாவட்டத்தில் அண்ணுதுரை

சுற்றுப்பயணம்

★

20 காலை 10 மணி: அம்மன்புரம்; மாலை 6 மணி: ஆத்தூர்; இரவு 8½ மணி: சிவத்தயாபுரம்.

21 காலை 10 மணி: பாளையங்கோட்டை; மாலை 6 மணி: தூத்துக்குடி.

கழகக் கூட்டம்

★

புதியம்புத்தூர்
மிசின் தோட்டத்தில்
11—8—55 மாலை 8½ மணிக்கு
தலைவர்: கே. வி. கே. சாமி
பேசுபவர்:
சி. என். அண்ணுதுரை

தென்னுற்காடு மாவட்ட தி. மு. க. தோழர்கட்கு

"தென்னுற்காடு மாவட்டத்தில், தோழர் சி. என். அண்ணுதுரை அவர்கள், இத்திங்கள் 28, 29, 30, 31-ந் தேதிகளில் சுற்றுப் பயணம் செய்வார்கள்;

"மாவட்டத்தில் உள்ள கிளைக் கழகங்களில் இன்னும் மாநில மாநாட்டிற்கான பங்குத் தொகையை அனுப்பாதிருப்பவை, உடனடியாக அனுப்பித் தர வேண்டுகிறேன்;

"அண்ணு அவர்களின் விரிவான சுற்றுப்பயணத் திட்டம் அடுத்து வெளியிடப்படும்."

° ° °

"28-8—55 ஞாயிறன்று பகல் 2 மணி அளவில், மாவட்டக் கழக அலுவலகத்தில், அண்ணு அவர்கள் முன்னிலையில், மாவட்டக் கழகக் கூட்டம் நடைபெறும். பிரதிநிதிகள் யாவரும் தவருது வருகை தர வேண்டுகிறேன்"

என்று தென்னுற்காடு மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் இரா. சாம்பசிவம் அறிவிக்கிருர்.

தமிழ் நாடு திருக்குறள் 2-வது மாநாடு

21—8—55 காலை 9 மணிக்கு, திருச்சி தேவர் மன்றத்தில், தோழர் வீ. முனுசாமி எம். பி. தலைமையில் நடைபெறும். தோழர் வி. எ. முத்தையா மேற்படி மாநாட்டை ஆரம்பித்துவைப்பார். தோழர்கள் ஜி. அண்ணுமலை முத்து ராஜா, நா. பெரியண்ணன், ரம்போலா மஸ்கரேனஸ், அப்துல் கபூர், தி. பொ. வேதாசலம், வை பொன்னம்பலனர், நெடுமாறன், மற்றும் பலர் கலந்துகொள்வர்.

திருமணங்கள்

21—8—55 காலை 9½ மணிக்கு, பூலாமேடு இராசேந்திரன் இல்லத்தில், தோழர் இராசேந்திரன்—தோழியர் சரோசா திருமணம், தோழர் பாலகுருசாமி தலைமையிலும், தோழியர்கள் அருண்மொழி, பூங்கோதை ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறும். தோழர் பொ. சொக்கலிங்கம் வாழ்த்துரை வழங்குவார்.

* * *

21—8—55 பகல் 11 மணிக்கு, மலம்பட்டி, க. ந. சுப்பையா வாத்தியார் இல்லத்தில், தோழர் சுந்தரம்—தோழியர் தாயம்மாள் திருமணம், தோழர் எம். எஸ். இராமசாமி தலைமையில் நடைபெறும்.

* * *

21—8—55 காலை 10 மணிக்கு, மாயவரம் வட்டம், அகரகடக்கம் அ. குமாரசாமி இல்லத்தில், தோழர் சுந்தரமூர்த்தி—தோழியர் சரசுவதி திருமணம், தோழர் தில்லை-வில்லாளன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் வி. எ. பாண்டியன், ஆர். பாலகுருசாமி ஆகியோர் பேசுவர்.

'திராவிடன்'

ஆசிரியர்: என். வி. நடராசன்

★

வாசகர்களுக்கு முக்கிய அறிவிப்பு:

9-ம் ஆண்டு துவக்க சிறப்பிதழ்
20-8-55 அன்று வெளிவருகிறது

அரிய கட்டுரை — கதை — கவிதைகள் — அறிஞர் அண்ணு அவர்களது பொதுத் தொண்டினைப் பற்றிய சில குறிப்புகள் — அழகிய முகப்பு — மற்றும் சிறந்த அம்சங்கள்

விலை 6 அணு

குறிப்பு: 19—8—55-ல் வெளிவரவேண்டிய இச்சிறப்பிதழ் கோவா படுகொலைக் கண்டன நாளை முன்னிட்டு நேற்று பொது விடுமுறையானதால் 20—8—55-ல் வெளிவருகிறது.

—நிர்வாகி, 'திராவிடன்', சென்னை

ஏகாதிபத்திய வெறிக்கு சென்னை கண்டனம்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

வேறு அரசியல் அமைப்புகள், தொழிற் சங்கங்களைச் சார்ந்தவர்கள் ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

தி. மு. கழகத்தின் சார்பில், 40-க்கும் மேற்பட்ட வட்டக் கிளைகள், கொடிகளுடன், பல்லாயிரக்கணக்கான ஊழியர்களுடன் கலந்துகொண்டனர். மாவட்டச் செயலாளர் கழகத் தோழர்களின் அணி வகுப்பைக் கண்காணித்துக் கொண்டார்.

ஊர்வலம்—சூளை, பெரியமேடு, சென்ட்ரல், சைனுபஜார், உயர்நீதி மன்றம் வழியாகக் கடற்கரையை அடைந்தது.

ஏகாதிபத்தியப் போக்கு, அடக்குமுறை வெறி ஆகியவற்றைக் கண்டிக்கும் ஒலி முழக்கங்கள் வானைப் பிளந்தன.

நகரில் நடைபெற்ற வேறெல்லா ஊர்வலங்களையும்விட அமைதியாகவும், சிறப்பாகவும் நடைபெற்ற ஊர்வலம் இதுதான்.

ஊர்வலத்தில் திரண்டு வந்த இலட்சோப இலட்சம் மக்களும், ஏற்கனவே கடற்கரையில் கூடியிருந்த மக்கள் வெள்ளத்துடன் கலந்துகொண்டபோது, பெருத்த ஆரவாரம் ஏற்பட்டது.

கடற்கரையில் நடைபெற்ற கூட்டத்தில் பல கட்சிகளையும் சார்ந்த தலைவர்கள் பேசினர்.

எல்லோரையும் வரவேற்று, கூட்டத்தின் நோக்கத்தை விளக்கி தோழர் ராஜாராம் பேசியதும், தோழர் என். அண்ணுமலை பிள்ளை (காங்) கூட்டத்திற்கு தலைமை ஏற்று உரை நிகழ்த்தினர்.

அடுத்து தோழர் ப. ஜீவானந்தம் (கம்யூ), டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு (காங்), தோழர்கள் சீனிவாசமூர்த்தி (சோஷ), சுயம்பிரகாசம் (திராவிட சட்டசபைக் கட்சி), வ. இரத்தினம் (தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம்) என். வி. நடராசன் (தி. மு. கழகத் துணைப் பொதுச் செயலாளர்), எதிராஜன் (ஜன சங்), குன்ஹி முகம்மது (முஸ்லீம் லீக்), டாக்டர் கே. பி. மேனன் (பி. சோ.), தோழர்கள் கே. விநாயகம் (தமிழரசுக் கழகம்), பி. இராமமூர்த்தி (கம்யூ), டி. செங்கல்வராயன் (காங்), எஸ். சி. சி. அந்தோணி பிள்ளை (தொழிற்சங்கம்), எம். ஏ. சிதம்பரம் செட்டியார் (நகரசபைத் தலைவர்) ஆகியோர் கோவா விடுதலைப் போராட்டம் பற்றியும், அடக்குமுறை வெறிக்கு கண்டனம் தெரிவித்தும் பேசினர்.

கூட்டம் துவங்கு முன்பாக, மேடையின் பந்தலைச் சுற்றி, மூவர்ணக் கொடித் துணி சுற்றப்பட்டிருந்ததையும், ஒரு மூலையில் கம்யூனிஸ்டு கட்சிக் கொடி கட்டப்பட்டிருந்ததையும் கூட்டத்திலிருந்த இதர கட்சியினர் ஆட்சேபித்தனர். தங்கள் கட்சிக்கொடி, தலைக்கு உயரே மேடையின் பந்தலில் பறந்து கொண்டிருந்ததைக் 'கவனிக்காத' கம்யூனிஸ்டுகள், 'இங்கு கொடிப் போராட்டம் நடத்தக் கூடாது—இது கோவா போராட்டக் கூட்டம்,' என்று திரும்பத் திரும்ப உபதேசம் புரிந்தனர். இதனால் சற்று உணர்ச்சிவயப்பட்ட இதர கட்சித் தோழர்கள் ஆளுக்கொரு கொடியுடன் மேடை மீதேறி, பந்தலில் தங்கள் தங்கள் கட்சிக் கொடிக்கு இடம் தேட முற்பட்டனர்; விளைவு பந்தல் சரிந்து விழுந்தது.

பின்னர், 'கூட்டத்திலிருக்கும் தி. மு. கழகத் தோழர்கள் அமைதியாக இருக்கவேண்டும்,' என்று தோழர் என். வி. நடராசன் கேட்டுக்கொண்டார்.

கழகத் தோழர்கள் அத்தனை பேரும், தனியாக வேறொரு இடத்தில் அமைதியாகக் கூடினர். கழகத் தோழர்கள், 'யார் எப்படி நடந்துகொண்டாலும், கழகத்தின் கண்ணியத்தை மனதில் கொண்டு பொறுமையுடன் நடந்துகொள்ள வேண்டும்,' என்று கேட்டுக்கொள்ளப்பட்டனர். தோழர்கள் பின்னர் அமைதியாக, கூட்டத்தில் கலந்துகொண்டு, சிறப்பித்தனர்.

நீத்தார் நினைவு நாள்

"11—8—55 அன்று, எனது தந்தையார் திரு. குருசாமி அவர்கள் இயல்கை எய்தியதை முன்னிட்டு, 21-8-55 காலை 9 மணிக்கு, பொன்மலை திராவிட வாலிபர் கழக தோட்டத்தில், திருச்சி வழக்கறிஞர் திரு. கயிலை அனந்தர் தலைமையில், 'நீத்தார் நினைவு நாள்' நிகழ்ச்சி நடைபெறும்,"

என்று, பொன்மலை தோழர் ஜி. பராங்குசம் அறிவிக்கிருர்.

திருக்குறள் வகுப்பு

20—8—55 மாலை 2½ மணிக்கு, சென்னை — பெத்துநாய்க்கன் பேட்டை, எண் 15, முத்துகிருஷ்ணன் தெருவில், தாய்மார் கழகச் சார்பில் திருக்குறள் வகுப்பு நடைபெறும் 'குற்றங் கடிதல்' என்பது பற்றி, திரு மயிலை சிவமுத்து, திருமதி சி. எஸ் இராஜேஸ்வரி ஆகியோர் பேசுவர்.

* * *

20—8—55 மாலை 6½ மணிக்கு, சென்னை-புரசை, பெரியசாலையிலுள்ள அன்னதான சமாஜ மண்டபத்தில், சென்னை திருவள்ளுவர் கழகச் சார்பில், 'திருக்குறள்—காமத்துப் பால்' என்பது பற்றி, திரு. கோ. சோமசுந்தரனுர் பேசுவார்.

புதுடில்லி, ஆக. 18—

இன்ஷ்யூரன்ஸ் நிறுவனங்களை நாட்டுச் சொத்தாக்குவது பற்றி சர்க்கார் ஆலோசித்து வருவதாக மத்திய ரெவினியூ மந்திரி எம். சி. ஷா தெரிவித்திருக்கிருர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.